விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.
O/L ஆண்டு 10,9
விஞ்ஞானம்
ஜே. ஆர். சூரி

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.
O/L ஆண்டு 10,9
கணிதம்
ஜெகன்

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 பங்குனி 02 திங்கட்கிழமை (15 03 1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 108

# கிழக்கில் தரை வழித் தாக்குதல் வடக்கில் விமானத் தாக்குதல்

## அரச ஊழியருக்கு மீண்டும் நஷ்டஈட்டுக் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், மார்ச். 15

அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்டு, இடைநிறுத் தப்பட்ட நஷ்டஈடு கொடுப் பனவுகள் விரைவில் மீண்டும் யாழ். மாவட்ட அரச ஊழியர் களுக்கு வழங்கப்படும்.

வன்செயல்களினால் பாதிக் கப்பட்ட அரச ஊழியர்களுக்கு அவர்கள் இழந்த அல்லது சேதமடைந்த உடைமை களுக்கு நஷ்டஈடு வழங்கும் திட்டம், திறைசேரியில் ஏற் பட்ட நிதிநெருக்கடியால் கடந்த வருடம் இடைநிறுத் தப்பட்டிருந்தது.

இந்த கொடுப்பனவுக்கான நிதியை தந்துதவுமாறு புனர் வாழ்வு அமைச்சு அமைச் சரவையும், திறைசேரியையும் கேட்டுள்ளதாகவும் —

(4ஆம் பக்கம் பார்க்க)

## பம்பாய் குண்டு வெடிப்புகள்; புலிகள் மீதே சந்தேகமாம்

பம்பாய் குண்டு வெடிப்புச் சம்பவங்களின் பின்னால் தமிழீழ விடுதலைப் புலிகள் தான் பிரதான சந்தேக நபர்களாக உள்ளார்கள்.

பம்பாய் பொலிஸ் பிரிவுத் தலைவர் அமர்ஜித் சிங் சம்ரா முன்கண்டவாறு தெரி வித்ததாக இலங்கை வானொலி சர்வதேச ஒலிபரப்பின் செய்தியறிக்கையில் தெரிவிக்கப் பட்டது.

''பம்பாய் குண்டு வெடிப்புச் சம்பவங் களில் பயன்படுத்தப்பட்டிருக்கும் வெடி மருந் துகள் இந்தியாவில் ஒரு போதும் காணப் படாதவையாகும்; அது போலவே பஞ்சாபி லும் காஷ்மீரிலும் பிரிவினை கோரிப் போராடி வரும் தீவிரவாதிகள்இது வரை இவற் றைப் பயன்படுத்தியது இல்லை'' — இவ்வாறு அவர் மேலும் கூறினார். (அ-எ)

## புலிகளுக்கு சம்பந்தமில்லை லோறன்ஸ் திலகர் மறுப்பு

புதுடில்லி, மார்ச் 15

பம்பாய் வெடிகுண்டுச் சம்பவத்தில் விடு தலைப் புலிகளுக்கு ஈடுபாடு இருக்கலாம் என்று கூறப்படுவதை விடுதலைப் புலிகள் இயக்கப் பேச்சாளர் லோறன்ஸ் திலகர் மறுத் துள்ளார்.

பாரிஸில் இருந்த திரு. திலகர் இந்த மறுப்பைத் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவத்துக்கும் விடுதலைப் புலி கள் இயக்கத்துக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என்றும் —

பம்பாயில் நடந்து வரும் இந்து-முஸ்லிம் கலவரத்தோடு தொடர்புடையது இது என்

[3ஆம் பக்கம் பார்க்க]

## வெடிக்காத இரு குண்டுகள் ஸ்கூட்டர் ஒன்றிலிருந்து மீட்பு

பம்பாய் நகரின் மத்திய பகுதியில் கைவி டப்பட்டிருந்த ஸ்கூட்டர் ஒன்றில் வைக்கப் பட்டிருந்த வெடிக்காத 2 குண்டுகளை பொலி ஸார் நேற்று கைப்பற்றினர்.

பின்னர் அக்குண்டுகள் செயலிழக்கச் செய்யப்பட்டன.

அக்குண்டுகள் சக்தி வாய்ந்த வெடிமருந் துகளைக் கொண்டு தயாரிக்கப்பட்டிருந்தன என்றும்—

அவை வெடித்திருந்தால் மோசமான அழிவு ஏற்பட்டிருக்கும் என்றும் பம்பாய்ப் பொலிஸார் தெரிவித்தனர். (உ-எ)

## காயமுற்ற ஆயிரம் பேரில் 400பேரின் நிலைகவலைக்கிடம்

பம்பாய், மார்ச் 15

பம்பாய்க் குண்டு வெடிப்புச் சம்பவங்களி னால் காயமடைந்த சுமார் ஆயிரம் பேரில் 400 பேரின் நிலைமை இன்னும் கவலைக்கிடமாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற 13 குண்டு வெடிப்புச் சம்பவங்களில் இதுவரை உயிரிழந்தோரின் எண்ணிக்கை சுமார் 300 எனத் தெரிவிக்கப்படுகின்றது.

படுகாயமுற்ற பலர் ஆபத்தான நிலையில் இருப்பதால் குண்டு வெடிப்பால் உயிரிழந் தோர் எண்ணிக்கை அடுத்து வரும் நாட்களில் அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது.

படுகாயமுற்றவர்களுக்கு ஏற்றுவதற்குத் தேவையான இரத்தத்தைப் பெறுவதற்காக இரத்ததான இயக்கங்கள் நடத்தப்பட்டு வரு வதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

## பாக். தொடர்பு பற்றி ஆராய்வு

பம்பாய் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களில் ஒருவர் தமக்கும் பாகிஸ்தானில் பயிற்சி பெற்ற காஷ்மீர் பிரிவினைக்வாதக் கெரில்லாக்களுக்கும் இடையே உள்ள தொடர்புகள் பற்றி பொலிஸாரிடம் தகவல் வெளியிட்டிருக்கிறார்.

புதுடில்லியில் இருந்து வெளிவரும் 'பேட் ரியட்' பத்திரிகை இச்செய்தியை வெளியிட்டி ருக்கிறது.

இதேவேளை—

இந்திய புலனாய்வுப் பிரிவினர் அமெரிக்க சமஷ்டிப் புலனாய்வு அதிகாரிகளுடனும் நியூ யோர்க் நகர பொலிஸாருடன் தொடர்பு கொண்டுள்ளனர் என்று 'பைனான்சல் எக்ஸ் பிரஸ்' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக் கிறது

குண்டு வெடிப்புச் சம்பவங்களுக்குப் பொறுப்பானவர்களை அடையாளங் காணும் முயற்சியாக இத்தொடர்பு ஏற்படுத்தப்பட் டுள்ளது என்றும் அப்பத்திரிகை தெரிவித்திருக் கிறது. (உ-எ)

## ஸ்ரீலங்காப் படைகளின் இப்போதைய உத்தி இது

கொழும்பு, மார்ச் 15

கிழக்குப் பகுதியில் தரை வழித் தாக் குதலை கடுமையாக முடுக்கிவிடும் அதே வேளை—

வடக்கில் விமானத் தாக்குதல்களை அதி கரிப்பதன் மூலம்—

இரு பிரதேசங்களிலும் போரைத் தீவிரப் படுத்துவதே அரசாங்கத்தின் இப்போதைய உடனடி இராணுவ உத்தி என்று அதிகார பூர்வ இராணுவ வட்டாரங்கள் தெரிவித்திருக் கின்றன.

இரு பிரதேசங்களிலும் இராணுவத் தாக்குதல்களைத் தீவிரப்படுத்தி, விடுதலைப் புலிகளை நிலை குலையச் செய்வதன் மூலமே அரசாங் கம் வகுக்கும் தீர்வு ஒன்றை திணிக்க முடியும் என்று உயர்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## சவர்க்கார உறைக்குள் கற்பூரம் கடத்த முயற்சி!

### வவுனியாவில் முறியடிப்பாம்

கொழும்பு, மார்ச் 15

ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியான கற் பூரத்தை லொறியில் வடக்கே கொண்டு செல்ல அண்மை யில் எடுக்கப்பட்ட முயற்சி வவுனியா சோதனை முகா மில் முறியடிக்கப்பட்டதாகக் கொழும்புப் பத்திரிகை செய்தி ஒன்று தெரிவித்தது.

சவர்க்காரம் என்ற போர் வையில்—சவர்க்கார 'லேபிள்' உறைகளுக்குள் கற்பூரக்கட்டி கள் வைக்கப்பட்டிருந்ததைப் படையினர் கண்டுபிடித்தனர் என்றும்—

சம்பந்தப்பட்ட லொறியின் சாரதியும் கிளீனரும் விசார ணைக்கு உட்படுத்தப்பட்டி ருப்பதாகவும் தெரிவிக்கப்பட் டது.

இந்தக் கற்பூரம் யாழ்ப் பாணத்துக்கு எடுத்துச் செல் லப்பட்டிருக்குமானால் அங்கு அதன் தற்போதைய பெறு மதி 11 இலட்சத்து 25 ஆயி ரம் ரூபா என்றும் தெரிவிக் கப்பட்டது. (உ)

### மட்டக்களப்பில்

## நடமாடும் சேவைக்கு வந்த 6,000 பேருக்கு ஏமாற்றம்

### அதிகாரிகள் திருப்பி அனுப்பினர்

கொழும்பு, மார்ச் 15

மட்டக்களப்பில் அண்மை யில் நடைபெற்ற புனர்வாழ்வு புனரமைப்பு, சமூக சேவைகள் அமைச்சின் நடமாடும் சேவைக்குத் தமது குறைக ளைத் தெரிவித்துப் பரிகாரம் காண வந்த 6 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் செயலக வாசலில் வைத்தே திருப்பி அனுப்பப்பட்டனர்.

இவர்களில் அதிக எண்ணிக் கையானவர்கள் இராணுவ நடவடிக்கைகள் மற்றும் வன் செயல்கள் காரணமாக பாதிக் கப்பட்டு அதற்கான நஷ்ட ஈட்டுக் கோரிக்கைகளுடன் வந்தவர்களாவர்.

அன்றைய தினம் புனர் வாழ்வு அமைச்சர் பி. தயா ரத்தினாவும், ராஜாங்க அமைச்சர் சமந்தா கருணா ரத்தினாவும் தமது அமைச் சின் நடமாடும் செயலகத்தில் அதிகாரிகளுடன் சமூகமளித் திருந்தனர்.

அதிகாரிகள் காலையில் இருந்தே ஒவ்வொருவராக அழைத்து குறைகளைக் கேட் டுக் கொண்டிருந்தனர். எல் லாக் கோரிக்கைகளும் நிவார ணம், நஷ்ட ஈடு என்றே இருந் தன.

இதனால் அதிகாரிகள் செய லக வாசலுக்கு வந்து ஒவ்

(4ஆம் பக்கம் பார்க்க)

## மயிலந்தனைப் படுகொலைகள்: தாம் குற்றவாளிகள் அல்லர் என்கின்றனர் படையினர்

கொழும்பு, மார்ச் 15

மட்டக்களப்பு மாவட்டம் மயிலந்தனையில் கடந்த ஆண்டு ஆகஸ்ட்டில் 35 தமி ழர்கள் படுகொலை செய்த சம்பவம் தொடர்பாக குற் றஞ்சுமத்தப்பட்ட 23 இரா ணுவத்தினரும் மட்டக்களப்பு நீதிமன்றத்தில் ஆஜர் செய்த போது தாங்கள் குற்றவாளி கள் அல்லர் என்று தெரிவித் தனர்.

சட்டவிரோதமாகக் கூடி யது, தாக்குதல் நடத்தியது மற்றும் கொலை செய்தது உட்பட 83 குற்றச்சாட்டுகள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வீரமரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 15

பண்டத்தரிப்பில் விடுதலைப் புலிகளுக்கும், படையினருக் கும் இடையில் நேற்று முன் தினம் இடம்பெற்ற மோதலில் வீரவேங்கை தாமோதரன் (சிவரத்தினம் ஸ்ரீகாந்தன்— ஒடக்கரை, பருத்தித்துறை) வீரமரணமடைந்தார். (உ-3)

## கிளாலி படகு சேவை இன்று

யாழ்ப்பாணம், மார்ச் 15

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்துக்கு நடைபெறும் என தமிழீழ விடுதலைப் புலிகள் நிதித்துறையின் யாழ். மாவட்ட வருவாய்ப் பொறுப் பாளர் அறிவித்திருக்கிறார். (உ-3)

## கராச்சியிலும் குண்டு வெடிப்பு!

கராச்சி, மார்ச் 15

கராச்சி மத்திய சிறை வளா கத்தில் உள்ள பொலிஸ் அதி காரி ஒருவரின் வீட்டில் சக்தி வாய்ந்த குண்டு ஒன்று நேற்று வெடித்ததில் காலித் இக்பால் என்ற பெயருள்ள பொலிஸ் அதிகாரி கொல்லப்பட்டார்.

இன்னொரு பொலீஸ்காரர் காயமடைந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

## "மகர யாழ்" விருதுக்கு டாக்டர் சிவகுமாரன் தெரிவு

யாழ்ப்பாணம், மார்ச் 15

மக்கள் கருத்தை அடிப்படை யாகக் கொண்டு, அறிஞர் குழு ஒன்றின் சிபார்சுக்கு அமைய, ''மகர யாழ்'' விருதுக்குரிய சான்றோராக, யாழ். போதனா வைத்தியசாலை யில் பணிபுரியும் வைத்திய நிபுணர் சபாரத்தினம் சிவ குமாரனை அகில இலங்கைக் கம்பன் கழகம் தேர்ந்தெடுத் துள்ளது.

தியாகம், தொண்டு மனப் பான்மை, கடமையுணர்ச்சி, இனப்பற்று ஆகியவற்றோடு இளம் தலைமுறைக்கு முன்னு தாரணமாக வாழ்ந்து வரும் ஒருவருக்கு ''மகர யாழ்'' விருது வழங்கும் திட்டத்தை அகில இலங்கைக் கம்பன் கழ கம் இந்த வருடம் தொடக் கம் நடைமுறைப் படுத்த உள் ளது.

அந்த வகையில் இவ்வருட விருதுக் குரியவராக டாக்டர் சிவகுமாரன் தேர்ந் தெடுக்கப் பட்டுள்ளார்.



பொதுமக்கள், சமூக அமைப் புகள் அனுப்பிய தெரிவுகளை

(3 ஆம பக்கம் பார்க்க)

உளவாளிகள்!!!
அவதானமாக இருக்கவும்...!
எங்கள் அயலிலும் ஊடுருவி இருப்பார் கள்; ஊர்விட்டு ஊர் தாவி அலைந்து திரிவார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

முச்சக்கர றிக்சோ வண்டிக்கெனப் பொருத்தப்பட்ட 26 அங்குல Van சைக்கிள் றிம் ரயர், ரியூப் ஒரு சோடியும், என்பீ..ட் இந்தியன் 200 மோட்டார் சைக்கிலும் (மண்ணெண்ணெய்க்கு மாற்றப்பட்டது) விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: இல. 9, பிளெச்சர் ஒழுங்கை, (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி அருகாமை) சுண்டிக்குளி. (24843)

புத்தம் புதிய RS - 110 Eletric Guitar, PSS-270 Organ விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 123, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (24837)

### டயறிகள் விற்பனைக்கு

சகலவிதமான எல்லா அளவுகளிலும் தரமான டயறிகள் விற்பனையாகிறது வியாபாரிகளுக்கு விஷேட கழிவுகள் வழங்கப்படும். பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம் (சி-4707)

### விற்பனையாகின்றன

எம்மிடம் தெய்வீக நூல்கள், பாடசாலைப் புத்தகங்கள், பாடசாலை உபகரணங்கள் ஸ்ரீமுக வருஷ இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கம் ஆகியன விற்பனையாகின்றன. சோதிட விலாச புத்தகசாலை, 46, பெரியகடை, யாழ்ப்பாணம், சோதிட பிரகாச இயந்திரசாலை, கொக்குவில். (6049)

### தேவை

ஓடியோ ஒலிப்பதிவு செய்வதற்கு அனுபவம் உள்ளவர்கள் தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும்: Sky-Rose No.1, Hospital Road, Jaffna. (6052)

### இலவச திருமணசேவை

50 வயது, .த்கராடம், கனடாவில் தொழில் புரிபவருக்கு மணப்பெண் தேவை. திருமணம் இலங்கையில் அல்லது Sponser செய்யலாம். நாடுங்கள்: ஞாயிறு காலையில். து. விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி. (24815)

33 வயது, அத்தம், செவ்வாய் 8, ஜேர்மனியில் தொழில் புரிபவருக்கு மணப்பெண் தேவை. பெண்ணை அழைக்க ஆவன செய்யலாம். தொடர்பு: ஞாயிறு காலையில். து. விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி. (24814)

### திருத்தவேலைகள்

கடிகாரங்கள் திருத்துதல் வேலைகள் உத்தரவாதத்துடன் தொடர்ச்சியாக மேற்கொள்கிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் ''அல்டி'' நிறுவனம் தெரிவித்துக் கொள்கின்றது. சி-4712)

### யாருடையது?

கட்டப்பிராய், சின்னப்பு குணசேகரம் என்பவரால் 10-03-93 அன்று அம்மன் வீதியில் ஒரு தங்கக் கைச்சங்கிலி கண்டெடுக்கப்பட்டுள்ளது உரியவர் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும். றேடியோஸ்பதி, இல 58 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (24839)

### மணமகன் தேவை

40 வயது. இந்து. 7இல் செவ்வாய் உள்ள விவாகரத்துப்பெற்ற பெண்ணுக்கு பொருத்தமான மணமகன் தேவை. கடித மூலம் தொடர்பு கொள்ளவும்: இல. 507, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (24838)

## வெற்றிடங்கள்

எட்டு கல்விக் கல்லூரிகள், பதினாறு பயிற்சிக் கல்லூரிகள் மற்றும் 31 தேசியக் கல்லூரிகளில் உள்ள கல்வித் துறையைச் சாராதவர்களுக்கான வெற்றிடங்களை நிரப்ப கல்விச் சேவைக்குழு விண்ணப்பங்களை கோரியுள்ளது.

விண்ணப்ப முடிவு திகதி 26 - 03 - 1993 என்றும் இது தொடர்பான மேலதிக விவரங்கள் சென்ற மாதம் 21ஆம் திகதி வெளியான வர்த்தமானியில் பிரசுரமாகியுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஆய்வுகூட உதவியாளர், இயந்திர இயக்குநர், தச்சுத் தொழிலாளர்கள், பாடசாலை தொழிலாளர்கள், மின்சார தொழிலாளர்கள், கட்டடப் பரிசோதகர், உதவி அத்தியட்சகர், காவலாளிகள் ஆகிய பதவிகளுக்கான வெற்றிடங்களே நிரப்பப்படவுள்ளன. (ஒ-எ)

கம்பியூட்டர்
கல்வி
BASIC LANGUAGE
4 MONTHS
திங்கள், புதன்
வகுப்புகள்

ஆரம்பம்:
17 — 03 — 1993
8-30 மணி

கட்டணம்:
மாதம் 400/-மட்டுமே

LOTUS 1-2 3,
SHORT -HAND &
TYPING
நடைபெறுகின்றன.

SCHOOL OF
BUSINESS
ADMINISTRATION
Pioneers in Computer
Education)
16 3rd. CROSS ST.,
JAFFNA
(சி-4714)

## மண்ணெண்ணெய் விலை சரிவு

யாழ்.நகரில் மண்ணெண்ணெய்யின் விலையில் கடந்த இரு தினங்களாக ஓரளவு வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது

ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் 160 ரூபாவிலிருந்து 145 ரூபாவாகவும், ஒரு போத்தல் 130 ரூபாவிலிருந்து 110 ரூபாவாகவும் குறைந்துள்ளது.

கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டமண்ணெண்ணெய் ப.நோ.கூ. சங்கங்கள் மூலம் பொது மக்களுக்குப் பங்கீட்டு அடிப்படையில் விநியோகிக்கப்படுவதை அடுத்தே வெளிச் சந்தையில் அதன் விலையில மாற்றம் ஏற்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. (த-5)

## ஹாட்லிக் கல்லூரி
## பழைய மாணவர் சங்கம்
## ஆண்டுப் பொதுக்கூட்டம்
(18 - 04 - 1993)

ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டம் 18 - 04 – 1993 முற்பகல் 10.00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

மேற்படி கூட்டத்தில் பங்குபற்ற விரும்பும் பழைய மாணவர்கள் 31 - 03 - 1993 க்கு முன்னர், உறுப்புரிமைப் பணத்தைச் செலுத்திக் கொள்ளும்படி வேண்டப்படுகிறார்கள்.

வி. செல்வராசன்.
எஸ். சுந்தரமூர்த்தி,
இணைச் செயலாளர்.

(24815)

## முக்கிய அறிவித்தல்

நல்லூர் லயன்ஸ் கழகம் அகதிகள் விழிப்புலனற்றோர் நிவாரண சுயதொழில் முயற்சிக்கு நிதி உதவி செய்வதற்காக பரியோவான் கல்லூரி மண்டபத்தில் 20 – 03 – 93 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் நடைபெற ஒழுங்கு செய்திருந்த முத்தமிழ் கலைவிழா, தவிர்க்க முடியாத காரணங்களால் இரு தினங்களுக்கு முன்பாக 18 - 03 - 93 வியாழக்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் — 6மணி வரை நடத்த ஒழுங்கு செய்துள்ளது இத் திகதி மாற்றத்தை லயன்ஸ் கழக உறுப்பினர்களும், கல்லூரிகளின் லியோக்கழக உறுப்பினர்களும் மற்றும் எமது ஆதரவாளர்களும் கவனத்தில் எடுக்கும்படி அன்பாக கேட்டுக்கொள்கிறோம்.

க. இராசலிங்கம்,
செயலாளர்.

வ. பரமசிவம்,
தலைவர்,
நல்லூர் லயன்ஸ் சழகம்.

(24825)

யாழ் உ. அ அ. பிரிவுக்குட்பட்ட

## மீனவர்களுக்கு மீண்டும் வறுமை நிவாரண முத்திரை

யாழ். உதவி அராசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட கரையோரப் பகுதி மீனவர்களுக்கான வறுமை நிவாரண உணவு முத்திரைகள், மீண்டும் யாழ். உதவி அரச அதிபர் அலுவலகத்தினால் வழங்கப்படுகின்றன.

இம் மீனவர்களின் வறுமை நிவாரண முத்திரைகள் சில மாதங்களுக்கு முன்னர் யாழ். உதவி அரச அதிபர் அலுவலகத்தினால் மீளப் பெறப்பட்டு அவர்களுக்கு 'இ' உலர் உணவு அட்டைகள் வழங்கப்பட்டன. இந்த அட்டைகளுக்கு மாதத்தில் 3 கட்டம் இலவச உலர் உணவும் வழங்கப்பட்டது.

தற்போது மீண்டும் உணவு முத்திரை வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, இம் மீனவர்களுக்கு மாதாந்தம் 2 கட்டம் 'இ' உலர் உணவு அட்டைக்கு உணவுப் பொருள்கள் வழங்கப்படுவதுடன், வறுமை நிவாரண முத்திரைக்கு வழமைபோல் உணவுப் பொருள்களும் வழங்கப்படும் என்று யாழ். உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் அறிவித்துள்ளது. (த-17)

ஜனாதிபதித் தேர்தலே நடக்கும்

## மாகாண சபைத் தேர்தல்கள் நிச்சயமாக நடைபெறாது

### சிறிமாவோ சொல்கிறார்

கொழும்பு, மார்ச் 15

மாகாணசபைத் தேர்தல்கள் நடைபெறும் எனக் கூறப்பட்டு வந்தாலும் நிச்சயமாக அவை நடத்தப்படமாட்டாது ஜனாதிபதித் தேர்தல் மாத்திரமே நடைபெறும்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா இவ்வாறு தெரிவித்துள்ளார். கொழும்பு விஹாரமகாதேவி பூங்காவில் நடைபெற்ற சர்வதேச மகளிர் தின வைபவத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:

நான் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டால் இப்போதுள்ள ஜனாதிபதி முறையை ஒழித்துக்கட்டுவேன். இப்போது எமது கட்சியும் ஏனைய சக கட்சிகளும் கூட்டாக இயங்குவதால் கைச்சின்னத்தில் போட்டியிடாது வேறு ஒரு பொதுச் சின்னத்தில் போட்டியிட நேரலாம்.

பொதுச் சின்னத்தில் போட்டியிட்டாலும், மக்கள் நிச்சயமாக கட்சியை மதித்து எமக்கு வாக்களிப்பார்கள்.

இந்தியாவில் பசுக்கன்றுச் சின்னத்தில் இருந்த காங்கிரஸ் கட்சியில் பிளவு ஏற்பட்டபோது இந்திரா காந்தி 'கை' சின்னத்தில் போட்டியிட்டு அமோக வெற்றியீட்டினார் — என்றார். (த-5-1)

யாழ்.
பல்கலைக்கழக
## வெளியீடுகள்

பின்வரும் நூல்கள் விற்பனைக்கு உண்டு. தேவையானோர் நிர்வாகக் கிளை உதவிப் பதிவாளருடன் தொடர்பு கொள்க

1. சித்துவ ..ரோ ணி சி ..ணே சையாத வாழ்க்கை.யு. பணியு: — சி சிவ ங்க ராச ரூ 30/ )
2. பண்டைத் தமிழகம் — கலாநிதி சி க சிற்றம்பலம் ரூ 375/-
3. நூல..வி..வி.. ட்டிய லாசகம் — விமலாம் பிகை பலசுந்தரம் (ரூப 60/
4. Political ommunication and the Electroal Process – Dr. S. K. S. Nathan Rs 35/-
5. யாழ்ப்பாண இராச்சியம் — பதிப்பாசிரியர்: கலாநிதி சி க. சிற்றம்பலம் (ரூபா 450/-)

- பதிவாளர்.

யாழ். பல்கலைக்கழகம்
திருநெல்வேலி
யாழ்ப்பாணம்
993 03 2
(சி-4678

## 2ஆம் ஆண்டு இதய அஞ்சலி



மண்ணில்:
19
06
1913

விண்ணில்:
07
04
1991

### அமரர் அ சிவசாமி
(ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர் புலோலி கிழக்கு, பருத்தித்துறை)

அன்பிற்கும், பண்பிற்கும், பாசத்திற்கும், அறிவிற்கும் உறைவிடமான அன்பான ஐயாவே! எங்கள் குடும்ப தீபமே! நெஞ்சில் எம் நினைவில் நாம் வணங்கும் தெய்வமைய்யா நீங்கள் ஆண்டு இரண்டு எங்கள் விழி நீரோடு மறைந்ததையா! உங்கள் நினைவு மட்டும் எங்கள் நெஞ்சங்களைவிட்டு என்றும் அகலாது உங்கள் ஆத்மசாந்திக்கு எங்கள் இதயமென்னும் கோயிலிலே மணமென்னும் விளக்கேற்றி, அன்பென்னும் மலர்தூவி அர்ச்சனை செய்கின்றோம்.

அன்பு மனைவி பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

உதவி அரசாங்க அதிபர் பணிமனை –
அருகாமை, சண்டிலிப்பாய்

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி
### வள்ளியம்மை வேலுப்பிள்ளை

தோற்றம்:
14 — 04 — 1906

மறைவு:
12 — 02 — 1993

ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கின்றோம்.

- குடும்பத்தினர்.

18, மணல்தறை லேன்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(சி 4682)

## யாழ்ப்பாணக் கல்லூரி
## பரிசளிப்பு விழா 1993

பிரதம அதிதி

திரு. அ. கதிர்காமர்
(முன்னாள் அதிபர் யாழ் கல்லூரி, பதிவாளர் கிறிஸ்த இறையியற் கல்லூரி)

திருமதி மகிழ்மலர் கதிர்காமர்

வட்டுக்கோட்டை ஒட்லி மண்டபத்தில்
20 - 03 - 1993 சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறும்.

பழைய மாணவர்கள், பெற்றோர், நண்பர்கள் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்

முதல்வர்,
யாழ். கல்லூரி,
வட்டுக்கோட்டை

(சி/4685)

யாழ் வேம்படி மகளிர் கல்லூரி
## ஆண்டு-07 அனுமதி-1993

(1992 ஆம் ஆண்டு ஏப்ரலில் நடைபெற்ற 1991 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை அடிப்படையில்)

1992 ஆம் ஆண்டு ஏப்ரலில் நடைபெற்ற 1991ஆம் ஆண்டு 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் மாணவர்களுக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் இவ்வருடம் ஆண்டு-07 இல் அனுமதி வழங்கப்படவுள்ளது.

அனுமதி விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்வதோடு, புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய பாடசாலை அதிபரிடமிருந்து மாணவி புலமைப் பரிசில் பரீட்சையில் பெற்ற புள்ளி, சுட்டிலக்கம் ஆகியவற்றையும் உறுதிப்படுத்தி 26 – 03 – 1993 வெள்ளிக்கிழமைக்கு முன்னர் கல்லூரிக் காரியாலயத்தில் ஒப்படைக்கவும்

இ. இராஜரட்ணம்.

யாழ்ப்பாணம்.
14 – 03 – 1993

(சி-4684)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உதயன்

## முகத்தைக் காக்கும் தந்திரங்கள்

அவசர காலச் சட்டத்தை மற்றுமொரு முறை மீள் பரிசீலனை செய்யவுள்ளதாக ஸ்ரீலங்கா அரசாங்கம் ஐ. நா. சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு வாக்குறுதி அளித்திருக்கிறது.

பெப்ரவரி இறுதியில் ஆணைக்குழுக் கூட்டம் ஜெனிவில் நடைபெற்றது. அந்த மாநாட்டில், ஸ்ரீலங்கா அரசு மனித உரிமைகளைப் பேணுவதில் தக்கவாறு, எதிர்பார்த்த அளவுக்கு செயற்படவில்லை என்று கண்டிக்கப்படலாம், குற்றஞ்சாட்டப்படலாம் என அஞ்சப்பட்டது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் இரண்டு தடவைகள் நேரில் விஜயம் செய்து, ஆலோசனைகள் வழங்கிய பின்னரும் ஸ்ரீலங்காவில் மனித உரிமைகளைப் பேணுவதில் உண்மையான அக்கறை, தீவிர செயற்பாடு இருக்கவில்லை. அதனைச் சுட்டிக்காட்டி ஸ்ரீலங்காவிடம் பல கேள்விகள் தொடுக்கப்படலாம் என்றும் பேசப்பட்டது.

அத்தகைய ஒரு கடும் பாதக நிலை தோன்றாமல் தடுப்பதற்காகவே பெப்ரவரி முதல்வாரத்தில் அவசரகாலச் சட்டவிதிகள் சிலவற்றைத் தளர்த்துவதாக அரசாங்கம் அறிவித்தது. அதிலும் மனப்பயம் நீங்காமல், இங்கிருந்து இரண்டு விசேட பிரதிநிதிகள், ஆணைக்குழுக் கூட்டத்துக்கு ஜெனிவாவுக்கு விரைந்தனர் தமது சூத்தைகளை மறைக்கவும், ஐ. நா. வுக்குப் பணிவதாகக் காட்டிக்கொண்டு நல்ல பிள்ளையாக நடித்துக் காட்டவுமே விசேட பிரதிநிதிகள் அனுப்பப்பட்டனர்.

ஐ. நாவின் யோசனையை ஏற்று, மதித்துச் செயற்படுத்திக் கொள்வதாகக் காட்டிக் கொள்ள வேண்டிய அவசியம் ஸ்ரீலங்காவுக்கு உண்டு. அவ்வாறு நடந்து கொள்ளவில்லையெனின் மேற்குலக நாடுகளிடம் இருந்து நிதி உதவியும், கடனும் பெறுவது கஷ்டமாகி விடுமே!

அதனாலேயே கொழும்பிலிருந்து ஆணைக் குழுக் கூட்டத்துக்குச் சென்ற ஜனாதிபதியின் ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன், அவசரகாலச் சட்டத்தை மீளப் பரிசீலிக்கவும், சித்திரவதைக்கு எதிரான ஐ நா ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவும், படையினருக்கு எதிரான மனித உரிமை மீறல்கள் சம்பந்தமான விசாரணைகளை துரிதப்படுத்தவும் தாராளமாக ஒப்புதல் அளித்துவிட்டு வந்திருக்கிறார்! இவை யாவும் முகத்தைப் பாதுகாக்கும் ஏற்பாடுகளே அன்றி இதயத்தில் இருந்து எழுந்தவை அல்ல.

பெப்ரவரி மாத முற்பகுதியில் அரசு அவசரகாலச் சட்ட விதிகளை தளர்த்திய தந்திரத்தை ஆராய்ந்தால் உண்மை விளங்கும் ஓர் உதாரணம்: அவசர காலச் சட்ட விதிகளின் கீழ் கைது செய்யப்படும் ஒருவரை விசாரணைக்காக ஒரு வருட காலத்துக்கு தடுத்து வைக்கலாம் என்று இருந்தது. அதனைத் தளர்த்தும் போது தடுத்து வைக்கும் கால எல்லையை மூன்று மாதங்களாகக் குறைத்து விட்டு, தேவை எனக் கண்டால் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் அனுமதியுடன் ஒவ்வொரு மூன்று மாதமும் நீடிக்கலாம் என மாற்றப்பட்டுள்ளது அதன் விளைவு: ஒரு வருடத்துக்கும் மேலாக ஒருவரை தடுத்து வைக்கலாம் என்பதாகும்.

இந்த லட்சணத்தில்தான் சித்திரவதை எதிர்ப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுதல், படையினருக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்துதல் என்பனவும் இடம் பெறும் என்று எதிர்பார்க்கலாம்.

# வடக்கு - கிழக்கை பிரிப்பதற்கு இந்தியா மறைமுக ஆதரவு

## தமிழகத்தில் வைத்து மதகுரு குற்றச்சாட்டு

சென்னை, மார்ச் 15

வடக்கு - கிழக்கு மாகாணத்தை இணைக்க வேண்டும் என்று ஜே. ஆரும், ராஜீவ் காந்தியும் ஒப்பந்தம் செய்தனர். ஆனால் இன்று இணைக்கப்பட்ட மாகாணத்தை பிரித்துவிட ஸ்ரீலங்கா அரசு முனைகிறது இந்தியா அதற்கு மறைமுக ஆதரவு அளிக்கிறது.

இவ்வாறு, தமிழகத்துக்கு விஜயம் செய்த யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த கத்தோலிக்க மதகுரு ஒருவர் அங்குள்ள சமூக அமைப்புகளுக்கு அனுப்பிய அறிக்கை ஒன்றில் குற்றஞ் சாட்டியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இயங்கும் நற்சமூக நடுநிலையத்தைச் சேர்ந்த பிரஸ்தாப மதகுரு அந்த அறிக்கையின் பிரதிகளை தமிழகத்தில் உள்ள பத்திரிகைகளுக்கும் அனுப்பி வைத்ததாகத் தெரிவித்தார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இலங்கையில் தமிழ் மக்கள் பட்டினி நிலையில் சாகும் கட்டத்தில் இருக்கும் வேளையில், இந்தியா பாராமுகமாக இலங்கையுடன் சேர்ந்து விளையாடும் நிலையில் செயற்படுகிறது. இந்தியா தனது சொந்த நலனில் அக்கறையாக இருக்கின்றதே தவிர இலங்கைத் தமிழரின் நலனில் அக்கறையாக இல்லை என்பதையே வரலாறு காட்டுகிறது.

ஈழத்தமிழ் மக்கள் உண்மையிலேயே பஞ்சம், பட்டினி நிலையில் சிக்குண்டிருந்த வேளையிலேயே இந்தியா விமான மூலம் உணவு போட்டது. அது தனது சுயநலம் கருதியே.

கடந்த மூன்று வருடங்களாக தமிழ் மக்கள் மீது ஸ்ரீலங்கா[அரசு] பொருளாதார தடை, மின்சாரத்தடை போன்றவற்றை விதித்து மக்களை பட்டினி நிலைக்கு தள்ளியுள்ளது. மக்கள் சாகும் நிலைக்கு வந்துள்ளனர்.

இந் நிலையில் இந்தியா அவர்களுக்காக குரல் எழுப்பவில்லை. அதற்குப் பதிலாக ஸ்ரீலங்கா அரசுடன் சேர்ந்து செயற்படுகிறது

அது மட்டுமின்றி மேற்கு நாடுகள் இனப்பிரச்சனைக்கு தீர்வுகாண எடுக்கும் முயற்சிகளுக்கும் இந்தியா தடையாக இருக்கிறது

எமது நாட்டில் பிரிவினை ஏற்பட்டால் தமது நாட்டை அது பாதிக்கும் என்று இந்தியா கூறுகிறது.

இலங்கையில் சமஷ்டி ஆட்சியின் கீழ் வடக்கு - கிழக்கு இணைந்த ஆட்சி ஒன்றை கொண்டுவர இந்தியா ஏன் முனையக் கூடாது? — இவ்வாறு அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### காணாமற் போன இளைஞர்

# மயானத்தில் புதைக்கப்பட்ட நிலையில் சடலமாக மீட்பு

எட்டு நாட்களுக்கு முன்னர் காணாமற் போனதாகக் கூறப்பட்ட ஒருவர், மயானத்தில் சடலமாக புதையுண்ட நிலையில் மீட்கப்பட்டார்.

நாயன்மார்கட்டைச் சேர்ந்த சதாசிவம் குலராசா (வயது 26) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

செம்மணி மயானத்தில் கைகள் வெளியே தெரியக் கூடிய நிலையில் சடலம் ஒன்று புதைக்கப்பட்டிருந்ததாகவும்—

அதைப்பற்றிய தகவல் காவல்துறையினருக்குத் தெரிவிக்கப்பட்டதை அடுத்து சடலம் தோண்டி எடுக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது.

சடலம் அடையாளம் காணப்பட்ட நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது. சடலத்தில் அடிகாயங்கள் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சம்பந்தப்பட்ட இளைஞர் குடும்பத் தகராறு காரணமாக அடித்துக் கொலை செய்யப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்பட்டது. (உ-15)

## "மகர யாழ்" விருதுக்கு ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அடிப்படையாக வைத்து, மூவரின் பெயர்கள் இறுதித் தேர்வுக்காக முன்வைக்கப்பட்டன.

அந்த மூன்று பேர்களிலும் தேர்வுக்கான அறிஞர் குழு, டாக்டர் சிவகுமாரனையே தெரிவு செய்தது.

1981 ஆம் ஆண்டுதொடக்கம் யாழ். போதனா வைத்திய சாலையில் அரும்பணி புரிந்து வரும் டாக்டர் சிவகுமாரனுக்கு இப்போது வயது 47.

''மகர யாழ் விருது''க்கு டாக்டர் சிவகுமாரனைத் தெரிவு செய்து அகில இலங்கைக் கம்பன் கழகமும் தேர்வுக்கான அறிஞர் குழுவும் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது!

காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட டாக்டர் சிவகுமாரன், ஈழத்தின் புகழ் பூத்த கல்விமானும், யாழ் இந்துக்கல்லூரியின் முன்னாள் அதிபரும், ''ஈழநாடு'' பத்திரிகையின் பிரதம ஆசிரியருமான அமரர் ந. சபாரத்தினம், லீலாவதி தம்பதிகளின் புதல்வராவார்.

யாழ் மத்திய கல்லூரியின் பழைய மாணவரான இவர், கொழும்புப் பல்கலைக்கழகத்தில் தன் மருத்துவக் கல்வியைப் பூர்த்தி செய்து, பின் தன் பட்ட மேற்படிப்பினை லண்டனில் தொடர்ந்தார். மருத்துவத்தில் டாக்டர் பட்டம் (M. D.) பெற்ற இவரை லண்டன் அரச மருத்துவ நிபுணர் கழகம் தன் கௌரவ உறுப்பினராக (F. R. C. P.) ஏற்றுக் கொண்டுள்ளது.

கொழும்பு, வெலிசற, மன்னார் ஆகிய இடங்களில் கடமையாற்றிய இவர் 1981 முதல் யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையில் வைத்திய நிபுணராகக் கடமையாற்றி வருகிறார்.

இன்றைய சூழ்நிலையில் கல்வியாளர்கள் பலர் இந் நாட்டின் துன்பச் சூழ்நிலை கண்டு, தங்களுடைய சொந்த நலன் கருதி, தாயகம் விட்டு வெளியேறிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் தேசப் பற்றோடு இம்மண்ணுக்காகவும், துன்பப்படும் மக்களுக்காகவும் தொண்டாற்றி வரும் ஒரு சிலருள் டாக்டர் சிவகுமாரன் குறிப்பிடத்தக்கவர்.

### தொண்டாகச் செய்பவர்

வெளிநாடு சென்று தான் பெற்றுக்கொள்ளக் கூடிய வசதிகளைத் தியாகம் செய்து தொடு வைத்தியத்தைத் தொழிலாகக் கருதாமல் தொண்டாகக் கருதிப் பணியாற்றும் சான்றோன். ஏழை, பணக்காரன், உறவினர், நண்பர் என்ற எந்தவிதப் பாகுபாடுமின்றி சாதி, மத வேற்றுமைகளைக் கடந்து அரும்பணி ஆற்றும் அறிஞன்.

வைத்திய நிபுணர் என்ற வகையில் இங்கிருந்தபடி பிரத்தியேகமாகத் தான் பெற்றுக் கொள்ளக் கூடிய வசதிகளைத் துறந்து, காலை 7 மணி முதல் மாலை 7 மணி வரை பல அசௌகரியங்களுக்கு மத்தியில் மன நிறைவோடு தொண்டாற்றுவதோடு இப் போர்க்காலச் சூழ்நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையைத் தொடர்ந்து இயங்கச் செய்வதில் பெரும் பங்காற்றி வருகிறார்

தாம் சார்ந்த துறையினூடு தியாகவுணர்ச்சியோடும், இனப்பற்றோடும், மனிதாபிமானத்தோடும் இம்மண்ணுக்காகத் தொண்டாற்றி எமது இளைய தலைமுறைக்கு முன்னுதாரணமாக வாழ்ந்து கொண்டிருக்கும் டாக்டர் சபாரத்தினம் சிவகுமாரன் அவர்களுக்கு இவ்வாண்டுக்குரியதும் முதல் முறையாக வழங்கப்படுவதுமான, 1993 ஆம் ஆண்டுக்குரிய ''மகரயாழ் விருதை'' வழங்குவதில் எமது கழகம் பெரிதும் மகிழ்வெய்துகிறது

சமூகப் பொறுப்புணர்ச்சியோடு, இவ்விருதுக்கான சிபார்சுகளைப் பெருமளவில் வழங்கிய அனைத்துப் பெருமக்களுக்கும், சமூக அமைப்புக்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## புலிகளுக்கு....

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

றும் அவர் தெரிவித்துள்ளார்.

தளபதி கிட்டுவின் மறைவுக்கு பழிவாங்கும் நடவடிக்கையாக இத் தாக்குதலைப் புலிகள் நடத்தியிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுவது குறித்து பி.பி.ஸி. செய்தியாளர் அவரிடம் கேட்டார்.

"இந்தியாவுக்கு எதிராக இத்தகைய தாக்குதல்களை நடத்தும் எண்ணம் எமக்கு இல்லை. அதிலும் பார்க்க கிட்டு விடயம் தொடர்பாக இந்தியாவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதையே நாம் நாடுகிறோம் ஏனெனில் திரு. கிட்டுவை இந்தியக் கரையிலிருந்து 440 மைல்களுக்கு அப்பால் வைத்து இந்தியா வழிமறித்து பலவந்தமாகக் கூட்டிச் சென்றது.

''நாங்கள் அது குறித்து சட்ட நடவடிக்கை எடுக்கவே திட்டமிடுகிறோம். வேறு வழி எதனையும் அல்ல'' — என்று திரு. திலகர் பதிலளித்தார்.

## இடம்பெயர்ந்த ஓய்வூதியர் நிவாரணம் கோருகின்றனர்

யாழ்ப்பாணம், மார்ச் 15

யாழ் குடாநாட்டில் இராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்து அகதி முகாம்களிலும், உறவினர் வீடுகளிலும் வாழ்ந்துவரும் அரச ஓய்வூதியர்களுக்கு அரசாங்கமோ அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களோ நிவாரணம் வழங்க வேண்டும்.

இவ்வாறு கோரும் தீர்மானம் ஒன்றை வடமாநில ஓய்வூதியர் சங்கங்களின் சம்மேளனம் நிறைவேற்றியுள்ளது.

சம்மேளனத்தின் தலைவர் திரு. சி. வி. கே. சிவஞானம் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்திலேயே இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இடம்பெயர்ந்த ஓய்வூதியர்கள் தாங்கமுடியாத கஷ்டங்களின் மத்தியில் பட்டினிச் சாவை எதிர்நோக்கியுள்ளனர் என்றும் அத் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது

பிரஸ்தாப தீர்மானத்தை அரசாங்க அதிபரூடாக அரசாங்கத்துக்கு அனுப்புவதற்கு ஏற்பாடாகி வருகிறது. (அ-3)

### ஸ்ரீலங்காப் படைகள்

# தென் தமிழீழத்தில் ஆக்கிரமிப்புமுயற்சி

யாழ்ப்பாணம், மார்ச் 15

தென் தமிழீழத்தை முற்று முழுதான இராணுவ ஆக்கிரமிப்புக்குள் கொண்டு வரும் முயற்சிகளில் ஸ்ரீலங்கா அரசு இறங்கியுள்ளது.

மேற்கண்ட கருத்தை ''விடுதலைப் புலிகள்'' இதழ் வெளியிட்டுள்ளது

''விடுதலைப் புலிகள்'' இதழில் இவ்விடயம் தொடர்பான கட்டுரை வெளியாகியுள்ளது. அக்கட்டுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களை உள்ளடக்கிய தென்தமிழீழத்தை முற்று முழுதான இராணுவ ஆக்கிரமிப்பிற்குள் கொண்டுவரும் முயற்சியில் ஸ்ரீலங்கா அரசு இறங்கியுள்ளது.

அப்பிரதேசத்தில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் மேலும் பல இராணுவ முகாம்களை நிறுவியும்—

ஆள் பற்றாக்குறையை நீக்க பொலீஸ் படையை பயன்படுத்தியும்—

தென்தமிழீழத்தைத் தமது பூரண கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர ஸ்ரீலங்கா அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

பாரிய இராணுவ நடவடிக்கைகள் பலவற்றின் மூலம் தென்தமிழீழ நிலப்பரப்பில் இருந்து புலிகளை முற்று முழுதாக விரட்டி, பின் அங்கே பெருமளவில் சிங்களவர்களை குடியமர்த்தி, அப்பிரதேசத்தைச் சிங்களமயமாக்கி, தமிழீழ தேசியத்தின் முதுகெலும்பான தாயகக் கோட்பாட்டை சிதைப்பதுதான் இப் படை நடவடிக்கைகளுக்கான நோக்கமாகும்

தென்தமிழீழத்தில் கடந்த 33 மாதங்களாக நடைபெற்று வரும் தமிழின அழிப்பு முயற்சியில் ஏறக்குறைய எட்டாயிரம் தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர். எண்பது வீதமான மக்கள் இடம்பெயர்ந்து அகதி முகாம்களிலும், காடுகளிலும் மற்றும் பாதுகாப்பு இடங்களிலும் வாழ்கின்றனர். அவர்களது பொருளாதார வாழ்வு ஏறக்குறைய சிதைக்கப்பட்டு விட்டது.

புலிகளுக்கு எதிரான போர் என்ற போர்வையில் தென்தமிழீழ மக்களின் சொத்துக்கள் அழிக்கப்பட்டு, அவர்களது பொருளாதார முயற்சிகள் நாசமாக்கப்பட்டுள்ளன. ஆனாலும் புலிகளின் இராணுவச்செயற்பாடுகளை ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் தடுக்க முடியவில்லை. மாறாக அவை அதிகரித்த அளவில் இடம் பெறுவதுடன், சிங்களப்படையினர் மத்தியில் பாரிய உயிரிழப்புக்களையும் ஏற்படுத்தி வருகின்றன — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

## சவாரி வண்டில் ஏறியதில் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 15

மாட்டுச் சவாரி பார்க்கச் சென்றவர் சவாரி வண்டில் ஏறிக் காயமடைந்தார்.

கோப்பாயில் நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில், மாவிட்டபுரத்தில் இருந்து இடம்பெயர்ந்தவரான வைரவப்பிள்ளை மார்க்கண்டு (வயது 57) என்பவரே காயமடைந்தவராவார்.

சவாரியில் பங்குபற்றிய வண்டி ஒன்று சவாரிப்பாதையில் இருந்து விலகி, குறுக்காக ஓடி மக்கள் மத்தியில் நுழைந்த சமயமே கூட்டத்தில் நின்ற ஒருவர் வண்டியில் சிக்குண்டு காயமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

காயமுற்றவர் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். (உ-15)

## இழக்கில் தரை வழித்....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வட்டாரங்களில் கருதப்படுகிறது

அதனால் இந்தப் புதிய உத்தி இப்போதைக்கு நடைமுறைப் படுத்தப்படும் எனவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

கிழக்கு மாகாணத்தில் அரச படையினர் தங்கள் நிலையைப் பலப்படுத்துமுகமாக தரை இராணுவ நடவடிக்கைகளில் கூடிய கவனஞ் செலுத்துவர்

அதே வேளை, வட பகுதியில் உள்ள விடுதலைப் புலிகளின் நிலைகள் மீது விமானப் படையினர் நடத்திவரும் விமானத் தாக்குதல் தீவிரப் படுத்தப்பட்டுத் தொடரும் என்று அதிகாரபூர்வ இராணுவ வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது

### வடக்கில் தரைத் தாக்குதல் சாத்தியம் குறைவு

கிழக்கில் படையினர் தங்கள் நிலைகளை ஸ்திரப்படுத்துகின்றனர். இதனால் வட பகுதியில் பாரிய தரை இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தேவையான ஆட்களையும் உபகரணங்களையும் படையினர் ஈடுபடுத்த முடியாது என்று அர்த்தம் கொள்ள வேண்டியுள்ளது என்று பாதுகாப்பு அதிகாரிகள் விளக்கினர்

வெற்றிலைக்கேணி, ஆனையிறவு பாதை, குடாநாட்டுத் தீவுப்பகுதிகள் மற்றும் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள ஏனைய பகுதிகளின் மீது பூரண கட்டுப்பாட்டை நிலைநிறுத்துவதற்கு அதிக எண்ணிக்கையில் துருப்புகள் தேவைப்படுகின்றன அப்படி பயன்படுத்தப்படும் துருப்புகளை தாக்குதல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்த முடியாது— என்றும் அவ்வட்டாரங்கள் கூறின.

வடபகுதியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளை மீட்கக் கூடிய பாரிய இராணுவ நடவடிக்கை எதனையும் இராணுவம் மேற்கொள்ளவில்லை. என்றும்—

சிறிய அளவிலான தேடுதல் நடவடிக்கைகளே அங்கு இடம்பெற்றன என்றும் இராணுவ வட்டாரங்கள் ஒப்புக்கொண்டன— இவ்வாறு அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (அ-எ)

## பாகிஸ்தான் ஆழ்ந்த கவலை

லண்டன், மார்ச் 15

பம்பாய் குண்டுவெடிப்புச் சம்பவங்கள் தொடர்பாக தமது ஆழ்ந்த வருத்தத்தை தெரிவித்து. பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் இந்தியத் தலைவர்களுக்கு இரங்கல் செய்தி ஒன்றை அனுப்பி வைத்திருக்கிறார். [உ-3]

## எக்கலவில் கைது

கொழும்பு, மார்ச் 15

ஜா - எல எக்கலப் பகுதியில் பிளாஸ்டிக் தொழிற்சாலை ஒன்றில் வேலை செய்து வந்த ஆறு தமிழ் இளைஞர்களை பொலீஸார் கைது செய்தனர் என அறிவிக்கப்படுகிறது

விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என் சந்தேகத்தின் பேரில் இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரிவுக்குழுவின் அறிக்கை; 7தமிழ்க் கட்சிகள் ஆராய்வு

கொழும்பு, மார்ச் 15
நாடாளுமன்றத் தெரிவுக் குழு கடந்த வாரம் தனது இடைக்கால அறிக்கையைச் சமர்ப்பித்ததைத் தொடர்ந்து தெரிவுக்குழு தொடர்பாக அடுத்து எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து கொழும்பில் உள்ள ஏழு தமிழ் அரசியல் கட்சிகள் நேற்று(ஞாயிறு) கூடி ஆராய விருந்தன.

இவ்வாறு கொழும்புத் தமிழ் நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது. (த-எ)

## நாளை

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக மறுமலர்ச்சிக் கழகத்தின் 13 வது ஆண்டு நிறைவு விழா நாளை மாலை 4 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறும். (த)

## ஆலயங்களில்

உரும்பராய் பர்வத பத்தினி அம்மன் கோவில் மற்றும் பேச்சி அம்மன் கோவில் ஆகியவற்றில் இன்று பங்குனிப்பொங்கல் நடைபெறும். விசேட அபிஷேகமும் இடம் பெறும். (த-154)

o o o

கொக்குவில், மார்ச் 15
கொக்குவில், கற்புலந்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் வருடாந்தப் பங்குனிப் பொங்கல் விழா இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகிறது.

பங்குனி மாதத்தில் வரும் திங்கள் தோறும் பொங்கல் விழா நடைபெறும். பெரும் எண்ணிக்கையில் கலந்து கொள்ளும் அடியார்களின் வசதி கருதி ஆலயத்தில் பிரமாண்டமான பந்தல் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. [அ-69]

## பாடசாலைகளில்

கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் அதிபர் திரு. க. செல்வக்குமாரன் தலைமையில் நாளை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறும்.

கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (உ-89-152)

## இன்றைய உதைபந்தாட்டம்

மயிலணி, மார்ச் 15
ஸ்கந்தா ஐக்கிய விளையாட்டுக் கழகம், ஸ்கந்தா மைதானத்தில் நடத்திவரும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்கள் வருமாறு:-

★ ஜொலி போய்ஸ் எதிர் ஸ்ரீமுருகன்
★ ஸில்வர் ஸ்ரார் எதிர் கணேசன்ஸ் (உ-81)

## மற்றொரு கட்ட

# அத்தியாவசியப் பொருள் விநியோகம் இன்று முதல்

யாழ்ப்பாணம், மார்ச் 15
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் நடமாடும் வர்த்தக நிலையத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் அத்தியாவசியப் பொருள்கள் விநியோகத்தின் மற்றுமொரு கட்டம் இன்று முதல் நடைபெறும்.

பொருள்கள் விநியோகம் பிற்பகல் 2 மணி முதல் மாலை 6 மணிவரை பின்வரும் இடங்களில் குறித்த திகதிகளில் நடைபெறும்.

★ இன்று — ஆலடி, உடுவில்
★ நாளை — உடுவில் கிழக்கு அண்ணா சனசமூக நிலையம்
★ 17 ஆம் திகதி — தாவடி வடக்கு புளிசிட்டி.
★ 18 ஆம் திகதி — தாவடி காளிகோவிலடி.
★ 19 ஆம் திகதி — இணுவில் கலாஜோதி சனசமூக நிலையம். (த)

## இன்று

சுன்னாகம் கந்தரோடை ஐங்கரன் சிறுவர் மாதிரிப் பாடசாலை திறப்பு விழா இன்று காலை 10 மணிக்கு நடைபெறும். சுன்னாகம் கொத்தணி அதிபர் திரு. ப. விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (உ-89-152)

## இராணுவ நடவடிக்கை முடிவு

யாழ்ப்பாணம், மார்ச் 15
மட்டக்களப்பு தொப்பிகல காட்டுப்பகுதியில் ஸ்ரீலங்கா படைகள் பெருத்த எடுப்பில் மேற்கொண்ட 'ஒப்பரேசன் குமண' இராணுவ நடவடிக்கை எதுவித பயனும் இல்லாமல் முடிவுக்கு வந்ததாக புலிகளின்குரல் வானொலி தெரிவித்தது.

மட்டக்களப்பில் இவ்வாண்டு மேற்கொள்ளப்பட்ட இரண்டாவது பாரிய நடவடிக்கை இது என்பது குறிப்பிடத்தக்கது. (உ-3)

## இடைக்காட்டில் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 16
பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்றுக் காலை அச்சுவேலி, பத்தமேனி, இடைக்காட்டுப் பகுதிகளை நோக்கி ஷெல்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இத்தாக்குதல்களினால் ஒருவர் காயமடைந்தார். சில வீடுகளும் சேதமடைந்தன.

இடைக்காட்டைச் சேர்ந்த எ. கந்தையா (வயது 53) என்பவரே காயமடைந்தவராவார். இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். [உ-15]

## மரண அறிவித்தல்கள்

### காசிப்பிள்ளை விநாயகமூர்த்தி

திரு. காசிப்பிள்ளை விநாயகமூர்த்தி (ஓய்வுபெற்ற Cashier, Carsons Cumberbatch and Co., Colombo) 14-03-93 நேற்றுக் காலமானார் இவர் சரஸ்வதியின் அன்புக் கணவரும், திருமதி இராஜேஸ்வரி சண்முகரத்தினம் (ஆசிரியை, தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி), Dr. சிவனேஸ்வரி சிவானந்தா (U. S. A.), திரு. கணேசலிங்கம் (கனடா), திருமதி யோகேஸ்வரி பூலோகசிங்கம் (ஆசிரியை, யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை), திருமதி ஞானேஸ்வரி பாக்கியகுமார் (ஓமான், முன்னாள் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி ஆசிரியை ஆகியோரின் அருமைத் தந்தையும், திரு. க. சண்முகரத்தினம் (பிரதி அதிபர், பலாலி ஆசிரியர் கல்லூரி), திரு. மா. சிவானந்தா (பொறியியலாளர், கனடா), திருமதி க. மனோரஞ்சினி (கனடா), திரு பொ. பூலோகசிங்கம் (சட்டத்தரணி), திரு. வ. பாக்கியகுமார் (பொறியியலாளர், ஓமான்) ஆகியோரின் அன்பு மாமனாரும், ராஜ்வதனி, ராஜீவன், கீர்த்தனா, வருணன், பிரணவன், ஆதவன் ஆகியோரின் அருமைப் பாட்டனாரும், காலஞ்சென்ற வை. சின்னாச்சிப்பிள்ளை, காலஞ்சென்ற கந்தையா, திருமதி க. தங்கப்பிள்ளை, திருமதி க. கதிராசிப்பிள்ளை ஆகியோரின் அருமைச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் சமக்கிரியைகள் இன்று (15-03-93) திங்கட்கிழமை, இல. 05 அம்பலவாணர் வீதி, உடுவிலில் மு. ப. 11.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் பூவோடை மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திரு. க. சண்முகரத்தினம்
(மருமகன்)

(24847)

### கார்த்திகேசக் குருக்கள் தெய்வநாயகி அம்மா

கந்தரோடை வற்றாக்கை விசாலாட்சி அம்மன் கோவிலைச் சேர்ந்த கார்த்கேசக் குருக்கள் தெய்வநாயகி அம்மா 13-3-93 சனிக்கிழமை நள்ளிரவு காலமானார்.

இவர் காலஞ்சென்ற கார்த்திகேசக் குருக்களின் அன்பு மனைவியும், சதானந்த சர்மா (நளினி கிலைறன்டிங் மில், யாழ்ப்பாணம்), சிவானந்த சர்மா, கிருபானந்த சர்மா (கொழும்பு), சுகுமாரசர்மா (யூ. கே.), லலிதாதேவி, ரமாதேவி (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும், நளினி, சிவஞானசுந்தராம்பாள், ரமணி, காலஞ்சென்ற சண்முகராஜரத்தின சர்மா, ஜெயானந்தசர்மா ஆகியோரின் மாமியாரும், ரமணன், பவித்ரா, ரம்யா, கௌசிகா, சுபாஸ்ஜினி, சுகன்யா, பிரசன்னா, பிரவீன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரது மரணக்கிரியைகள் 14 03 93 ஞாயிற்றுக்கிழமை கந்தரோடையில் நடைபெற்றன.

தகவல்
சதானந்தசர்மா
(மகன்)

(சி/4686)

### திருமதி நடராசா நாகரத்தினம்

(ஓய்வுபெற்ற ஆசிரியை அ. மி. த. க. வித்தியாசாலை -இணுவில்)

இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி நடராசா நாகரத்தினம் 13-3-1993 அன்று காலமானார்.

அன்னார் திரு. மா. நடராசாவின் அன்பு மனைவியும், கவலராணி (ஆசிரியை, யாழ் கொக்குவில் இந்துக் கல்லூரி) சிவனேசன் (மில்க்வைற்), சிவகுமாரன் (யாழ் தொழில்நுட்பக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற மகாதேவனின் அன்புச் சகோதரியும், ரத்தினம் மகாதேவனின் மைத்துனியும், பாலாம்பிகை, கெங்காதரன், சிறிதரன் தேவாம்பிகை, சகிதரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று திங்கள் (15-3 93) நண்பகல் 12 மணியளவில் இணுவிலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் காரைக்கால் மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும் என்பதை அறியத்தருகிறோம்.

இணுவில்.

தகவல்:
ந. கமலராணி
(மகள்)

(24848)

## தாம்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
இவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளன:

எதிரிகளான படையினர் அனைவரும் மீண்டும் இராணுவக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

வழக்கின் பூர்வாங்க விசாரணை மட்டக்களப்பு மாஜிஸ்திரேட் முன்னிலையில் அடுத்த மாதம் மூன்றாம் வாரத்தில் ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஆண்டு ஆகஸ்ட் 8 ஆம் திகதி அராலி கண்ணிவெடித் தாக்குதலில் ஜெனரல் கொப்பேகடுவ உட்பட படைத் தளபதிகள் பலர் கொல்லப்பட்டதை அடுத்து. மறுநாள் மயிலந்தனையினல் 35 தமிழர்களைப் படையினர் கொலை செய்தனர் என்பது தெரிந்ததே. (உ-எ)

## நடமாடும்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
வொருவரிடமிருந்தும் அவர்களின் கடிதங்களைப் பெற்றுகொண்டு ''நீங்கள் வீடு செல்லுங்கள். நாங்கள் பின்னர் தொடர்பு கொள்கிறோம்'' என்றனர்.

இதனைத் தொடர்ந்து முதல்நாள் இரவு முதல் கால் கடுக்க நீண்ட வரிசையில் நின்ற மக்கள் பலத்த ஏமாற்றத்துடன் திரும்பினர். (த-1)

## அரச...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
இந்த நிதி விரைவில் கிடைக்கும் என்றும்—

புனர்வாழ்வு அமைச்சு அதிகாரிகள் யாழ். அரச அதிபரிடம் தெரிவித்துள்ளனர்.

நிதி இங்கு வந்து சேர்ந்ததும் முன்னர் விண்ணப்பித்தவர்களுக்கு நஷ்டஈடு வழங்கப்படும் என்று [illegible] ரங்கள் கூறின. (அ-3)


# காணவில்லை

## நாராயணசுவாமி கனகராயன் (ராஜன்)

(கொழும்பைப் பிறப்பிடமாகக் கொண்டவர்)

என்பவரை 23 02-1993 முதல் காணவில்லை. அன்று மாலை யாழ்ப்பாணத்தில் இருந்து கிளிநொச்சி புறப்பட்டுச் சென்ற இவருக்கு வயது 22, சிவந்த நிறமுடையவர். நீல நிற கீப்ஸ் சாரமும், பட்டர் கலர் சேட்டும் அணிந்திருந்தார். இவர் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் தயவுசெய்து பின்வரும் முகவரிக்குத் தகவல் தரவும்.

யோகாஸ் புடைவை மாளிகை, இல. 16 B, பெரியகடை, யாழ்ப்பாணம்

சாந்தி புடைவை மாளிகை, கண்டி வீதி, கிளிநொச்சி.

(24844)

## கொழும்புத்துறை மேற்கு மாதர் சங்க வளர்ச்சிக்காக

# மாபெரும் நாடகக் கலைவிழா

அரியாலை "கலைமகள் கலை ஒளி" நாடக மன்றத்தின் மாபெரும் படைப்பான

" இந்த மண் எங்களின் சொந்த மண் புகழ் " S. G. சாந்தன் அரிச்சந்திரனாகவும்

அரியாலையூர் நடிக கலாமணி V. செல்வம் சந்திரமதியாகவும்

இணைந்து வழங்கும்

## ★ அரிச்சந்திரா மயான காண்டம் ★

(புராண இசை நாடகம்)



இடம்: கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலய விளையாட்டு மைதானம்
காலம்: 16 — 03 — 1993 செவ்வாய் (நாளை) இரவு 7-30 மணி

விளம்பர அன்பளிப்பு

காவேரி ரெக்ஸ், 48, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்.

சோதி ரெக்ஸ்ரைல்ஸ், 14, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 15-03-1993இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org